1971 டிசம்பர் 14]

கொடுப்பது என்கிற பிரச்சினையும், அவர் கொடுத்திருப்பார் என்று இவர் கொடுக்காமலும், இவர் கொடுத்திருப்பார் என்று அவர் கொடுக்காமலும் இருக்கிற நிலையும் காணப்பட்டது. இதனால் பஸ் வேகமாகப் போவதற்கு அனுகூலம் ஏற்படவில்லை. ஆகவே அங்கங்கே பஸ் ஸ்டாப்புகளில் ஸ்டாண்டிங் கண்டெக்டர்களைப் போட்டு டிக்கெட் கொடுத்துவிடுவதனால் பஸ் வேகமாகப் போவதற்கு அனுகூலமாக இருக்கிறது என்பதைக் கண்ட பின்னர்தான் 2 கண்டெக்டர்கள் தேவையில்லை என்ற முடிவு செய்யப்பட்டது. இதனால் அதிகச் செலவு ஆவதும் தவிர்க்கப்படும்.

திரு. எஸ் முருகையன் : தலைவர் அவர்களே, நெரிசல் மிகுந்த நேரங்களில் சென்னை மாநகரத்தில் 50 இடங்களில் பஸ்கள் கட்டாயமாக நிறுத்தப்படும் என்று பத்திரிகைகளில் செய்தி வந்ததே, அந்தத் திட்டத்தின் விவரங்கள் என்ன? முற்பகல் 10-30.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நெரிசல் மிகுந்த நேரங்களில் கூட்டம் அதிகமாக இருப்பதனாலும், அடிக்கடி பஸ்கள் ஸ்டாப்புகளில் நிற்பதில்லையென்கிற புகார் வந்ததாலும், சென்னை நகரில் போக்குவரத்து நெரிசல் மிகுந்தவை என்று 50 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த ஐம்பது இடங்களிலும் பஸ்கள் கட்டாயமாக நின்று போக வழி செய்யப்பட்டது. பயணிகள் ஏறினாலும் ஏறாவிட்டாலும், இறங்கினாலும் இறங்காவிட்டாலும் பஸ்கள் அந்த இடங்களில் கட்டாயமாக நிற்க வேண்டும் என்று திட்டமிட்டு, அது 1—12—1971 முதல் அமலாகியிருக்கிறது. மேலும், பயணிகள் வரிசையாக நின்று பேருந்துகளில் ஏறுவதற்காக விசேஷ 'க்யூ' ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பயணிகள் நல்ல ஒத்துழைப்புத் தருகிறார்கள். போக்குவரத்துத் துறையில் இருக்கிற தொழிலாளர்களும் பஸ்களை நிறுத்தி நல்ல முறையில் ஒத்துழைப்புத் தருகிறார்கள். ஏற்கனவே 3 மணி நேரம் நெரிசலைத் தவிர்க்க தேவை ஏற்பட்டது என்கிற நிலைமையை மாற்றி, ஒரு மணி நேரத்தில் நெரிசலைத் தவிர்க்க முடிகிறது. இந்தக் கட்டுப்பாட்டைக் கொண்டு வந்ததன் மூலம் நெரிசல் ஒரு மணி நேரத்தில் தவிர்க்கப்படுகின்றது.

கோபுரம், விமானம் கட்டும் பணிகளுக்குப் பயிற்சி

* 392 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவில் கோபுரத் திருப்பணிக்கான 'சுதைவேலை' பயிற்சியளிக்கும் பள்ளி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, 'சுதை வேலை' செய்யும் கலையே தமிழ்நாட்டில் அழிந்துவிடும் நிலை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அதில் பயிற்சி அளிப்பதற்காக பயிற்சிப் பள்ளி ஒன்றை நிறுவி, பயிற்சி அளித்து, பயிற்சிபெற்றவர்களுக்கு அறநிலையத் துறையின் மூலமாக அவர்களை வேலைக்கு அமர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போது மகாபலிபுரத்தில் தொழில்துறை மூலமாக 'சுதை வேலை' பயிற்சி நடத்தப்பட்டு வருகிறது. ஆகவே, அறநிலையத் துறை மூலமாக தனியாக பயிற்சிப் பள்ளியை ஆரம்பிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, வடபழனி ராஜ கோபுரம் கான்க்ரீட் மூலமாக அமைக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அப்படி அமைப்பதால் பழைய கலைச் சிறப்புக்கள் கெட்டுப் போய்விடாதா?

மாண்புமிகு திரு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அது அரசுக்குத் தெரியும். அதனால் எந்தவிதமான பழைய நிலைமைகளும் கெட்டுவிடாது.

மதுரையில் கிராம தான இயக்கம்

***393 வினா—திரு. பி. எஸ். மணியன்**: மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தற்போது மதுரை மாவட்டத்தில் கிராம தானத்தின் கீழ் எத்தனை கிராமங்கள் தானமாகக் கொடுக்கப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன்: 18 கிராமங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் கிராமதானத்திற்குக் கொடுக்கப்பட்ட கிராமங்கள் சரியான முறையில் பரிபாலிக்கப்பட முடியவில்லையென்று கிராமதான ஊழியர்களே தகவல் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசு இதைக் கவனித்து, இது எந்தத் திசையில் போகவேண்டு மென்று அரசு வழிகாட்டி, உதவி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்திற்கு நேரடியாக எதுவும் வரவில்லை. அந்தப் பதினெட்டு கிராமங்களுக்கும் மத்திய, மாநில அரசுகளிலிருந்து 1968-69-ம் ஆண்டில் விவசாய அபிவிருத்திக்காக 64,105 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1969-70-ம் ஆண்டில் 74,500 ரூபாய் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயத் துறையில் புதிய கிணறுகள் வெட்டுதல், மின்சார பம்பு